DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 118/2014

PROSECUTION WITNESS No - PW- 11

Name : டாக்டர்.மகேஸ்வரன் Caste:

Father Name/ Calling:

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of April 2026.

4, 6 மற்றும் 9ம் எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது காளையார்கோவில் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமையியல் மருத்துவராக பணிபுரிந்து கடந்த 2022 ல் பணி ஓய்வு பெற்று எனது சொந்த ஊரான சிவகங்கையில் வசித்து வருகிறேன். கடந்த 14.6.2000ம் தேதியில் சிவகங்கை மாவட்ட அரசு மருத்தவமனையில் பணியிலிருந்தபோது ஜெகப்பிரமணியன் என்ற பழனி என்ற 38 வயதுடைய ஆண் பிரேதத்தை காளையார்கோவில் காவல்நிலைய ஆய்வாளர் திரு.முத்து என்பவர் ஒரு வேண்டுகோள் கடிதத்துடன் படிவம் 86 கொடுத்தார். அந்த படிவம் 86 **அ.சா.ஆ.31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை செய்ய 14.6.2000ம் தேதி காலை 11.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். அவருக்கு கீழ்க்கண்ட வெளிக் காயங்கள் காணப்பட்டது.

**வெளிக்காயங்கள்:**

1. நீண்ட ஆழமான வெட்டுக்காயம் இடதுபக்க வாயிலிருந்து இடது காதுவழியாக பின்பக்க மண்டையை கடந்து சென்று வலது பக்க காது வரை ஆழமாக காணப்பட்டது. அதில் தண்டுவடம் வெட்டப்பட்டிருந்தது.

2. வலது பக்க மண்டையில் 5 X 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

3. உச்சி மண்டை பகுதியில் 4 X 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

4. இடது பக்க மண்டையில் 10 X 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

5. இடது பக்க முழங்கையின் பின்புறம் 2 X 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

6. இடது முன் பக்க கையில் 2 X 5 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் ஹன்னா எலும்பு முறிந்து காணப்பட்டது.

7. இடது கையில் 4 வெட்டுக்காயம்; 2 X 1 செமீ செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

8. இடது கட்டைவிரலில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

9. வலது பக்க தோள்பட்டையில் 10 X 3 செமீ அளவில் சதையோடு வெட்டப்பட்ட ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

10. வலது தோல்மூட்டில் 2 X 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

11. வலது பக்க நெஞ்சின் கீழ்பகுதியில் 5 X 10 செமீ அளவில் ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

12. வலது பக்க மேல் வயிற்றுப் பகுதியில் 2 செமீ அளவில் ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

13. இடது பக்க வயிற்றின் கீழ்பகுயில் 3 செமீ அளவில் ஒரு குத்துக்காயம் காணப்பட்டது. அது வயிற்றின் உள் பகுதியில் சென்றிருந்தது.

14. 13 வது காயத்தின் பின்பக்கத்தில் 5 செமீ அளவில் ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

15. இடதுபக்க வயிற்றின் பின்பகுதியில் 3 X 4 செமீ அளவில் ஒது குத்துக்காயம் காணப்பட்டது.

16. இடதுபக்க நெஞ்சின் பின்பகுதியில் 10 X 2 செமீ அளவல் மேல் வெட்டக்காயம் காணப்பட்டது.

17. இடது பக்க நெஞ்சின் பின்பகுதியில் அடிப்பகுதியில் 5 X 10 செமீ குத்துக்காயம் காணப்பட்டது.

18. நெஞ்சின் பின்பகுதியில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

19. வலது பக்க நெஞ்சின் பின்பகுதியில் தோள்பட்டை எலும்புக்கு கீழ் பகுதியில் 3 X 2 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

20. வலது பக்க பின் தசைபகுதியில் 2 X 4 அளவில் ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

21. இடது பக்க தொடையின் வெளிபகுதியில் 2 X 1 செமீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

22. இரண்டு கால்களின் கீழ்பகுதியில் தோள் உரிந்து காணப்பட்டது.

**உள்காயங்கள்:**

இடது உதர விகான பின்பகுதியில் குத்தப்பட்டிருந்தது. அதனால் 50 மிலி அளவில் ரத்தம் செறிந்து காணப்பட்டது. வலது பக்க 10வது விலா எலும்பு உடைந்து காணப்பட்டது. இடதுபக்க நுரையிரலீன் கீழ்பக்கம் ரத்தம் செறிந்து காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக இருந்தது. கல்லீரலின் வலது பக்கத்தில் கீழ்பகுதியில் 5 செமீ அளவில் வெட்டி காணப்பட்டிருந்தது. இடது சிறுநீரகம் வெட்டப்பட்டிருந்தது. வலது சிறுநீரகம் சீராக இருந்தது. வலது பக்க மூளையில் ரத்தம் செறிந்து காணப்பட்டது. முதுகுதண்டுவட ஆக்சிஸ் முதுகெலும்பின் அளவில் வெட்டப்பட்டிருந்தது.

**கருத்து:**

மேலே சொன்ன வெளி மற்றும் உள் காயங்களினால் இறந்த நபரின் முக்கிய உறுப்புகளில் ஏற்பட்ட காயங்களினால் 18 – 20 மணி நேரத்திற்கு முன்பு

இறந்திருக்கலாம் என சான்று வழங்கிறேன். நான் மேற்சொன்ன நபருக்கு பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் இறந்த நபரின் உடலில் இருந்த துணிமணி மற்றும் கைப்பற்றிய பொருட்களின் வேதியியல் தடய அறிவியல் கூடத்தின் மூலம் சீராலாஜி அறிக்கை பெறப்பட்டது. மேற்படி சீராலாஜி அறிக்கை **அ.சா.ஆ.33** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பான பொருட்கள் குறித்த உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ.34** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி அ.சா.ஆ.33 மற்றும் அ.சா.ஆ.34 எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது). நான் மேலே சொன்ன 1 முதல் 21 காயங்கள் வெட்டுக்காயங்களாகவும் குத்துக் காயங்களாகவும் உள்ளது. நீதிமன்றத்தில் தற்போது காண்பிக்கப்படும் அருவாள்களால் நான் மேலேசொன்ன வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நான் மேலே சொன்ன குத்துக்காயங்களானது தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தி மூலம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காளையார்கோவில் காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

பொதுவாக வெட்டுக்காயங்கள் ஒரு ஆயதத்தால் வெட்டப்படும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. அதேபோல் குத்துக்காயங்கள் ஒரு ஆயுதத்தால் குத்தப்படும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்சொன்ன 1 முதல் 21 காயங்கள் வேல்கத்தி மற்றும் வாள், போன்ற ஆய்தத்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்ட நபர் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு பிறகு 1 மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை உயிருடன் இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காயங்கள் ஏற்பட்ட பின்பு காயம்பட்ட நபர் ஒரு சில மணி துளிகள் உயிருடன் இருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். என்னிடம் ஆய்வாளர்

ஆயுதங்களை காண்பிக்கவில்லை என்றும் கருத்துக்கள் எதுவும் கேட்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த நபருக்கு இரைப்பையில் செரித்த உணவோ அல்லது பகுதி செரித்த உணவோ அல்லது உணவு பொருட்கள் இருந்ததாகவோ தனித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் இரைப்பையில் திரவம் எதுவும் இருந்ததா என்பது குறித்தும் அவற்றின் நெடி குறித்தும் தனியாக எனது அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன நபர் நான் பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பாக அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் 22 – 26 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை.** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.01 17:32:52 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை